**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**போச்சம்பள்ளி , கிருஷ்ணகிரி மாவட்டம்**
**முன்னிலை – திரு. S.V. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
போச்சம்பள்ளி.

2024 – ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் நாள் சனிக்கிழமை

**I.A No. 04/2022**
**In**
**O.S NO. 114/2018**

லட்சுமணன்

....மனுதாரர்/1ம் பிரதிதிவாதி

/எதிராக/

காசிராஜன் ... எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனுவானது 06.12.2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. G. கேசவன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.R.மாணிக்கப்பிரபு அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, மனு, எதிருரை பரிசீலனை செய்யப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது கட்டளை 7 விதி 11 மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் படி வாதியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் பிராதினை முழுவதுமாக நிராகரித்து உத்தரவிடக் கேட்டு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் அபிடவிட்டின் சுருக்கம்:**

1. மனுவில் நான் மனுதாரர் மற்றும் மேற்படி வழக்கில் 1-ம் பிரதிவாதி ஆவேன். இம்மனுவில் எதிர்மனுதாரர் மேற்படி வழக்கில் வாதி ஆவார்.

2. மேற்படி வழக்கினை வாதி எனக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளார்.

3. மனுதாரர்/1ம் பிரதிவாதியாகிய நான் தாவாவில் என் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை இந்த மனுவில் ஒரு அங்கமாய் வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன்.

4. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள தாவாவில் சொத்து விவரம் இல்லாமல் கற்பனையான சங்கதிகளை தெரிவித்து எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். அதனால் தாவாவின் பிராதினை முதல் நிலையிலேயே நிராகரிக்க வேண்டிய அவசியமும், நியாயமும் உள்ளது.

5. சொத்து விவரம்தாவாவில் குறிப்பிடாத நிலையில் சொத்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாலும், கற்பனையாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாலும், தாவா கனம் நீதிமன்ற அதிகார எல்லைக்குள் வருவதில்லை. அதனால் இந்த தாவா பிராதினை நிராகரிக்க வேண்டிய அவசியமும் நியாயமும் உள்ளது. இல்லையேல் எனக்கு இதனால் பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும் அசல் வழக்கு எண். 114/2018ன் பிராதினை முழுமையாக நிராகரித்து உத்தரவிடக்கேட்டு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்.**

1. மனுதாரர்களின் மனு வீணாணது, சட்டப்படியும் நீதிப்படியும் நிலைக்கதக்கதல்ல, மாறாக தள்ளுபடி செய்ய தக்கதாகும்.

2. இந்த எதிர் உரையில் குறிப்பாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர ஏனைய மனுவின் சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

3. மனுவில் 4 முதல் 7 பாராக்களில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் எதிர்மனுதாரரால் மறுக்கப்பட்டுள்ளது.

4. எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் முதல் நிலை தீர்ப்பாணையின் பேரில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு தாக்கல் செய்த போது தவறுதலாக சொத்து விவரத்தினை தட்டச்சு செய்யாமல் தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. மேற்படி தவறானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல.

5. மேற்படி தவறுக்கு திருத்தப்பாடு மனு செய்து மேற்படி மனுவானது விசாரணைக்கு நிலுவையில் உள்ளது. திருத்தப்பாடு நிலுவையில் உள்ளபோது மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல.

6. வழக்கில் ஏற்பட்டுள்ள தவறினை திருத்தப்பாடு மனு செய்ய தீர்ப்புக்கு முன் வரை மனுத்தாக்கல் செய்ய மனுதாரருக்கு சட்ட உரிமை உள்ளது. மேலும் மேற்படி திருத்தப்பாடு விவரத்தில் கூறியுள்ள சொத்தினை பொருத்து நீதிமன்றத்தில் இறுதி நிலை தீர்ப்பாணை வேண்டி மனு செய்து மேற்படி மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

7. தாவாவில் தாக்கல் செய்துள்ள ஆவண பட்டியலில் நீதிமன்ற உத்தரவினை தாக்கல் செய்துதான் வாதி தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணத்தில் தாவா சொத்து குறித்து தெளிவாக கூறப்பட்டுள்ளது. தாவாவின் சொத்து விவரம் போடவில்லை என்ற ஒரே காரணத்திற்காக

மட்டுமே மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி செல்லாது. திருத்தப்பாடு மனு நிலுவையில் உள்ளபோது இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. எனவே மனுதாரர்களின் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து நீதி வழங்குமாறு கேட்டு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. தீர்வு

இம்மனுவில் முடிவு செய்யவேண்டிய அம்சம் என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

4. இம்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது இவ்வழக்கின் பிராதில் சொத்து விவரம் குறிப்பிடப்படவில்லை என்றும், சொத்தின் மதிப்பானது கற்பனையாக மதிப்பிடப்பட்டுள்ளது என்றும், சொத்து விவரம் குறிப்பிடாத காரணத்தால் பிராதை நிராகரித்து உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

5. எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது பிராதில் சொத்து விவரம் குறிப்பிடாமல் விடப்பட்டது தட்டச்சு பிழை என்றும், மேற்படி பிழையானது வேண்டுமேன்றே ஏற்பட்டது அல்ல என்றும், மேற்படி சொத்து விவரத்தை வழக்குரையில் சேர்ப்பதற்கு திருத்தப்பாடு மனுத்தாக்கல் செய்து மனு நிலுவையில் உள்ளதாகவும், மேற்படி மனு நிலுவையில் இருக்கும் போது இந்த மனுவானது நிலைக்கத்தக்கதல்ல என்றும் மேற்படி சொத்து விவரம் குறிப்பிடாத தவறை சரி செய்ய மனுதாரருக்கு உரிமை உள்ளது என்றும், அந்த காரணத்திற்காக மட்டுமே பிராதை நிராகரித்து உத்தரவிட இயலாது என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

**6. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 11 கீழ்க்கண்டவாறு உள்ளது.**

**Rejection of plaint.**

The plaint shall be rejected in the following cases-
**(a)** where it does not disclose a cause of action;
**(b)** where the relief claimed is undervalued, and the plaintiff, on being required by the Court to correct the valuation within a time to be fixed by the Court, fails to do so;

**(c)** where the relief claimed is properly valued, but the plaint is returned upon paper insufficiently stamped, and the plaintiff, on being required by the Court to supply the requisite stamp-paper within a time to be fixed by the Court, fails to do so;

**(d)** where the suit appears from the statement in the plaint to be barred by any law:

**Provided** that the time fixed by the Court for the correction of the valuation or supplying of the requisite stamp-paper shall not be extended unless the Court, for reasons to be recorded, is satisfied that the plaintiff was prevented by any cause of an exceptional nature form correcting the valuation or supplying the requisite stamp-paper, as the case may be, within the time fixed by the Court and that refusal to extend such time would cause grave injustice to the plaintiff. **என்று கூறப்பட்டுள்ளது.**

**7. இவ்வழக்கானது எதிர்மனுதாரர்/ வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல்**

செய்யப்பட்டுள்ளது.

8. பிராதில் சொத்து விவரம் குறிப்பிடப்படாமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் மனுதாரர் தரப்பில் மேற்படி காரணத்திற்காக வழக்கை நிராகரிக்க கேட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. மேற்படி சங்கதிகளின் அடிப்படையில் வழக்குரையை நிராகரிக்க இயலுமா என்று பரிசீலனை செய்த போது கட்டளை 7 விதி 1 (a) படி வழக்குரையில் வழக்கு முலம் இல்லை என்றால் நிராகரிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் வழக்குரையில் வாதி வழக்கு தாக்கல் செய்ய வழக்கு மூலம் இல்லை என கூறவில்லை. அதற்கு மாறாக வாதி பிராதில் வழக்குச் சொத்து விவரத்தை குறிப்பிடப்படவில்லை என்றும், நீதிமன்ற கட்டணம் கற்பனையாக குறிப்பிடப்பட்டுள்ள என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் வழக்குரையை சொத்து விவரம் குறிப்பிடாத ஒரே காரணத்திற்காக நிராகரிக்க இயலாது. மேற்படி சொத்து விவரம் குறிப்பிடாத சங்கதியானது ஒரு சரி செய்யக்கூடிய தவறாகும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் எதிர்மனுதாரர்/வாதி மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ளார். அதை பொருத்து நீதிமன்ற கட்டணமானது அந்த பரிகாரத்தின் அடிப்படையில் ஒரே தன்மையில் தான் இருக்கும். மேலும் கட்டளை 7 விதி 11ல் கூறப்பட்டுள்ள a முதல் e வரையிலான காரணிகளின் அடிப்படையில் மட்டுமே வழக்குரையை நிராகரித்து உத்தரவிட இயலும். மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள சங்கதியின்படி சொத்து விவரம் குறிப்பிடாத சங்கதியை வைத்து மட்டும் வழக்குரையானது மேற்படி பிரிவில் கூறப்பட்ட காரணங்களுக்குள் வழக்குரையை நிராகரிக்க தகுந்த

**வகையில் அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.**

**இறுதியாக இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

**என்னால் சொல்லப்பட்டதை, சுருக்கெழுத்து தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024 –ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by SHANMUGANATHAN
Location: Pochampalli

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், போச்சம்பள்ளி.**

**மனுதாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்–** **இல்லை.**

**எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்.–** **இல்லை.**

SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by SHANMUGANATHAN
Location: Pochampalli

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், போச்சம்பள்ளி.**